## சுருக்கம்

பள்ளிக் கல்வி – 2009–2010 மற்றும் 2010–2011ஆம் கல்வியாண்டில் நிலையுயர்த்தப்பட்ட நடுநிலைப் பள்ளிகளுக்கு 1267 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித் (சி.2) துறை**

**அரசாணை (நிலை) எண். 15**

**நாள் 23.01.2012**
**(திருவள்ளுவர் ஆண்டு 2043, தை 9 )**

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.208, பள்ளிக்கல்வித் (சி2) துறை, நாள் 12.08.2009 மற்றும் அரசாணை (நிலை) எண்.216, பள்ளிக்கல்வித் (சி2) துறை, நாள் 21.08.2009.
2. அரசாணை (நிலை) எண்.193, பள்ளிக்கல்வித்(சி2) துறை, நாள் 15.07.2010.
3. அரசாணை (நிலை) எண்.196, பள்ளிக்கல்வித் (சி2) துறை, நாள் 19.07.2010.
4. மாநிலத் திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.744/அ5/அகஇ/ 2011, நாள் 20.05.2011.
5. தொடக்கக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.014785/ கே4/2011, நாள் 25.05.2011.

-----

ஆணை:–

மேலே 1 மற்றும் 3இல் படிக்கப்பட்ட அரசாணையில் ''அனைவருக்கும் கல்வி'' எனும் மைய அரசின் திட்டத்தின்கீழ் 2009–2010 ஆம் கல்வியாண்டில் 831 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 2010–2011 ஆம் கல்வியாண்டில் 218 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தி முறையே அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மேலே 2–இல் படிக்கப்பட்ட அரசாணையில், அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ், 2008–2009–ஆம் கல்வியாண்டில் நிலையுயர்த்தப்பட்ட 1005

நடுநிலைப் பள்ளிகளுக்கு 1005 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், 2009–2010 ஆம் கல்வியாண்டில் நிலையுயர்த்தப்பட்ட 831 நடுநிலைப்பள்ளிகளுக்கு 7 ஆம் வகுப்புக்கு இரண்டாவது ஆசிரியர் பணியிடமாக 831 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், 2010–2011 ஆம் கல்வியாண்டில் நிலையுயர்த்தப்பட்ட 218 நடுநிலைப்பள்ளிகளுக்கு 6ஆம் வகுப்புக்கு முதலாவது ஆசிரியர் பணியிடமாக 218 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் தோற்றுவித்து அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டன என்று தொடக்கக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் திட்ட ஒப்புதல் குழுவில் (Project Approval Board) 2009–2010ஆம் கல்வியாண்டில் தரம் உயர்த்தப்பட்ட 831 நடுநிலைப்பள்ளிகளுக்கு 2011–2012ஆம் கல்வியாண்டுக்கான மூன்றாவது ஆசிரியர் பணியிடங்களாக 831 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், 2010–2011ஆம் கல்வியாண்டில் தரம் உயர்த்தப்பட்ட 218 நடுநிலைப்பள்ளிகளுக்கு, 2011–2012ஆம் கல்வியாண்டுக்கான இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆசிரியர் பணியிடங்களாக (218+218) 436 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் அனுமதிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக அனைவருக்கும் கல்வி இயக்கக, மாநில திட்ட இயக்குநர் தெரிவித்துள்ளதாக தொடக்கக்கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. இந்நிலையில் ரூ.9300–34800+4600 தர ஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் பின்வருமாறு பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை தோற்றுவிக்குமாறு தொடக்கக் கல்வி இயக்குநர் கோரியுள்ளார்.

| | | | |
|---|---|---|---|
| I. | 2009–2010ம் கல்வியாண்டில் நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்ட 831 நடுநிலைப் பள்ளிகளுக்கு 8ம் வகுப்புக்கு 3–ம் ஆசிரியர் பணியிடம் | – | 831 |
| II. | 2010–2011ம் கல்வியாண்டில் நடுநிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்பட்ட நடுநிலைப் பள்ளிகளுக்கு 7 மற்றும் 8ம் வகுப்புக்கு ஒரு பட்டதாரி ஆசிரியர் (218+218) பணியிடம் வீதம் | – | 436 |
| | மொத்தம் | – | 1267 |

மேலும், இப்பணியிடங்களை நடைமுறையிலுள்ள விதிகளைப் பின்பற்றி ஆசிரியர் தேர்வு வாரியம் வாயிலாக பணி நாடுநர்களைத் தேர்வு செய்து நிரப்பிக்கொள்ள அனுமதி வழங்குமாறும், இப்பணியிடங்களுக்கான செலவினம் அரசு சம்பளக் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும் என்றும், பின்னர், இச்செலவினத்தை அனைவருக்கும் கல்வி இயக்க நிதியிலிருந்து ஈடுசெய்யவும் அரசின் ஆணையினை தொடக்கக்கல்வி இயக்குநர் வேண்டியுள்ளார்.

5. தொடக்க கல்வி இயக்குநரின் கருத்துருவினை நன்கு ஆராய்ந்த பின்னர், 2009–2010ம் கல்வியாண்டில் நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்ட 831 நடுநிலைப் பள்ளிகளுக்கு 8ம் வகுப்புக்கான ஆசிரியர் பணியிடங்களாக 831 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் மற்றும் 2010–2011ம் கல்வியாண்டில் நடுநிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்பட்ட 218 நடுநிலைப் பள்ளிகளுக்கு 7மற்றும் 8ம் வகுப்புக்கு ஒரு பட்டதாரி

ஆசிரியர் பணியிடம் வீதம் **436** பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் ஆக மொத்தம் **1267** பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை ரூ.**9300 – 34800** + **4600** தர ஊதியத்தில் இக்கல்வி ஆண்டிலேயே தோற்றுவித்தும், தோற்றுவிக்கப்படும் **1267** ஆசிரியர் பணியிடங்களை நடைமுறையிலுள்ள விதிகளை பின்பற்றி, ஆசிரியர் தேர்வு வாரியம் வாயிலாக பணி நாடுநர்களை தேர்வு செய்து நிரப்பிக்கொள்ள தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

**6.** மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணியிடங்களுக்கான சம்பளம் குறித்த செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்

"**2202** பொதுக்கல்வி **–01** தொடக்கக் கல்வி **101** – அரசு தொடக்கப் பள்ளிகள் –I திட்டத்தில் சேராதது – AD - அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குதல் **01** சம்பளங்கள்"
(து.தொ.கு **2202–01–101–** AD-0109)

7. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பற்று வைக்கப்படும் செலவினம் அனைவருக்கும் கல்வி திட்ட நிதியிலிருந்து திரும்ப பெறப்பட்டு கீழ்க்கண்ட கணக்கு தலைப்பில் வரவு வைக்கப்பட வேண்டும்.

" 0202 கல்வி, போட்டி, விளையாட்டுக்கள் கலையும் பண்பாடும்**–01** பொதுக் கல்வி **–101** தொடக்கக் கல்வி –AA ஏனைய வரவுகள் – **12** அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழான வரவுகள் "
(து.தொ.கு **0202–01–101–** AA-1204)

**8.** மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணியிடங்களின் சம்பளம் குறித்த செலவிற்கான நிதி **2011–12–**ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு/இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். எனினும், **2011 –12–**ஆம் ஆண்டுக்கான துணை மதிப்பீடுகளில் ஒரு குறிப்பிட்ட தொகையை சேர்ப்பதன் மூலம், இது சட்டப்பேரவையின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும். மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கூடுதல் நிதியொதுக்கம் செய்யப்படும்வரை செலவினை மேற்கொள்ள தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

**9.** இச்செலவினத்தினை **2011–2012**ம் ஆண்டு திருத்திய மதிப்பீடு/இறுதித் திருத்த நிதியொதுக்கம் துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்குரிய கருத்துருக்களை உரிய காலத்தில் தவறாது அரசுக்கு அனுப்பிட தொடக்கக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

10. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.2804/சிஎம்பிசி/2012 நாள் 18.1.2012– இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடு தல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.1431 (ஆயிரத்து நானூற்று முப்பத்து ஒன்று).

(ஆளுநரின் ஆணைப்படி)

தி.ஸ்ரீ.ஸ்ரீதர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மாநில திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வி இயக்ககம்,
சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்,
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை–18/35.
<u>நகல்:–</u>
நிதித்( வரவு செலவு(பொது–I/II/கல்வி.II/சி.எம்.பி.சி)துறை, சென்னை–9.
பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு (ம) இளைஞர் நலத் துறை அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
பள்ளிக் கல்வி(வரவு செலவு)துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

10. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.2804/சிஎம்பிசி/2012 நாள் 18.1.2012– இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.1431 (ஆயிரத்து நானூற்று முப்பத்து ஒன்று).

(ஆளுநரின் ஆணைப்படி)

தி.ஸ்ரீ.ஸ்ரீதர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மாநில திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வி இயக்ககம்,
சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்,
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை–18/35.
நகல்:–
நிதித்( வரவு செலவு(பொது–I/II/கல்வி.II/சி.எம்.பி.சி)துறை, சென்னை–9.
பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு (ம) இளைஞர் நலத் துறை அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
பள்ளிக் கல்வி(வரவு செலவு)துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அரசு சார்புச் செயலாளர்.